மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Sangam Literature is the Path Religion

K. Valli

Doctor of Philosophy, Department of Tamil, Queen Mary's College, Chennai, India

Manuscript ID : **MT127A0071**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 10.10.2022
Revised: 28.10.2022
Accepted: 15.11.2022
Published: 28.11.2022

Pages : 172-176

DOI: 10.5281/zenodo.7375210

ABSTRACT:

The ancient people's life in harmony with nature has made mankind special. Nature worship was also the culture of the palandamis. They have been worshiping sun, rain, wind, fire and land. Nadukal worship was also special. During the sangam era, religion was based on beliefs, rituals and natural forces. Like romantic and heroism, the ideas about the deity and the news about religion are spread. This review also explores the fact that there were no divisions.

KEYWORDS:

Tolkaappiyam, Sangam Literature, Names of Deities, Modes of worship

சங்க இலக்கியங்களின் வழி சமயம்

க. வள்ளி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, இராணி மேரி கல்லூரி, சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

பழந்தமிழர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த வாழ்வே மனித குலத்தை சிறப்படையச் செய்துள்ளது. இயற்கை வழிபாடே பழந்தமிழர்களின் பண்பாடாக இருந்தது. கதிரவன், மழை, காற்று, நெருப்பு, நிலம் ஆகியவற்றை வணங்கி வந்துள்ளனர். நடுகல் வழிபாடும் சிறப்புற்றிருந்தது. சங்க காலத்தில் சமயம் என்பது நம்பிக்கைகள், சடங்குகள் மற்றும் இயற்கை இயைந்த சக்திகளை அடிப்படையாகவே கொண்டு அமைந்துள்ளது. சங்க பாடல்களில் காதல், வீரம் போன்றே தெய்வம் பற்றிய கருத்துக்களும் சமயம் பற்றிய செய்திகளும் விரவி காணப்படுகின்றன. சங்க பாடல்களின் வழி சமயம் பொது நோக்கோடு இருந்ததையும் பிரிவினைகளின்றி இருந்தது என்பதையும் இவ்வாய்வுக் கட்டுரை ஆராய்வதாக அமைகின்றது.

கருச்சொற்கள்

தொல்காப்பியம், சங்க இலக்கியம், தெய்வங்களின் பெயர்கள், வழிபாட்டு முறைகள்

முன்னுரை

மக்கள் தம்மைச் சூழ்ந்துள்ளவற்றையும் நமக்குத் தேவையானவையாக இருக்கின்ற நெருப்பு, காற்று, மழை, ஞாயிறு முதலிய இயற்கைப் பொருட்களையே தெய்வமாகக் கொண்டு முதற்கண் வழிப்பட்டு வந்தனர். பின் அவர்களின் அறிவு முதிர முதிர இயற்கையை வழிப்பட்டு வந்த மக்கள், சங்க காலங்களில் நடுகல் வழிப்பாட்டினை முதன்மையாக கொண்டு உருவம் கொடுத்து சமய வழிப்பாட்டில் ஈடுபடலாயினர். அவ்வழிப்பாட்டின் தொடக்கமே சமயத்தின் தொடக்கமாகும். சமயம் என்றால் மனிதனைச் சமைப்பது அல்லது பக்குவப்படுத்துவது என்று பொருள்படும்.

“மனிதன் விலங்கினின்று தோன்றியவன். அவனை விலங்கினின்னு பிரிப்பது சமயம். விலங்கு + சமயம் - மனிதன். எனவே சமயம் இன்றியமையாதது. மெய்யறிவு விளங்கப் பெற்றவர்கட்கும் அவ்வறிவுண்மையைக் கலையறிவினால் உணர்ந்து அதைகூறிக் கொண்டு நிற்பவர்க்கும் சமயம் ஒன்றே. மெய்யறிவு பெறாதார்க்குச் சமயம் பலவாகவேத் தோன்றும்”.

தொல்காப்பியம் கூறும் சமயக்கருத்துகள்

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையான் சொல்லவும் படுமே" **தொல்பொருள் - 05**

காடும் காடு சார்ந்த நிலமாகிய முல்லை நிலத்திற்குத் தெய்வமாகத் திருமாலினையும் மலையும் மலையைச் சார்ந்த நிலமுமாகிய குறிஞ்சி நிலத்திற்கு தெய்வமாக முருகனையும், வயலும் வயலைச் சார்ந்த நிலமுமாகிய மருத நிலத்திற்கு தெய்வமாக இந்திரனையும், மணல் பொருந்திய வளம் குறைந்த நெய்தல் நிலத்திற்குத் தெய்வமாக வருணனையும், பழந்தமிழ் மக்கள் வணங்கினர் என்பதனை இந்நூற்பாவழி குறிப்பிட்டுள்ளனர்.

சங்க இலக்கியங்களில் சிவபெருமான்

சங்க இலக்கியங்களில் சிவபெருமானை ஆலமர்செல்வன், மழுவாள் நெடியோன், முக்கட்செல்வன், கணிச்சியோன், நான்மறை முதல்வன், நீலமணிமிடற்றொருவன், அருந்தவமுதல்வன், தொன்முதுகடவுள், முதுமுதல்வன், ஆதிரையான், சீர்கெழு சிறப்பினோன், கொலைவன் என்று பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளனர். இப்பெயர்களின் வழியே அப்பெருமானின் நிறம், வடிவம், கைக்கொண்டிருக்கும் கருவிகள், அருஞ்செயல்கள் முதலியவனவற்றை அறியமுடிகிறது.

"இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந்து உயர்மலை இருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கயிற் கீழ்புகுத் தம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவள் போல" **குறிஞ்சிக்கலி 2**

இராவணன் பேராற்றல் படைத்தவன் இறைவனிடத்துப் பெரிதும் பத்திமை பூண்டவன். மண்டோதரியாம் கற்புக்கரசியை மணந்தவன். இமயமலையிடத்துப் பிறந்த மூங்கிலாகிய வில்லை வளைத்தவன், ஈரத்தை உடைத்தாகிய சடையினை உடையவனுமான இறைவன், இறைவியோடு பொருந்தி, உயர்ந்த கயிலை மலையில் இருந்தனன். அரக்கர்க்கு அரசனாகிய இராவணன் மலையை அடியுடன் பெயர்த்தலுக்காக கையைக் கீழே சொருகித் தொடிப்பொலிவு பெற்ற அத்தடக்கயினாலே அம்மலையை எடுக்க இயலாது வருந்திய நிகழ்விலிருந்து, சிவபெருமான்

அரக்கர்களையும் அவர்களின் தீயெண்ணங்களையும் நிர்மூலமாக்கியதனை காண முடிகிறது.

சங்க இலக்கயங்களில் திருமால்

முல்லை நிலத்தின் தெய்வமாகப் போற்றப்படுபவர் திருமால். காடு என்றாலே பசுமையும், அடர்ந்த இருளுமே அதுவே காடுறை தெய்வமான திருமாலின் நிறமுமாகவும் இருப்பது மிகப்பொருத்தமே. அழகிய நீலமணி வண்ணனாகவும், கருடக்கொடியை உடையவராகவும் திருமால் புறநானுற்றில் புகழப்படுகிறார்.

"மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்" நற்-32

திருமாலின் அவதாரங்கள் பத்து என்பதை அறிவோம். ஆனால் சங்கப் பாடல்களில் இராமன், கண்ணன், நரசிம்மன், வராகம் (பன்றி), குறள்வடிவு (வாமனம்), பலராம், பரசுராம் என்ற ஏழு அவதாரங்களை பற்றிய குறிப்புகள் மட்டுமே காணப்படுகிறது.

தீயினுள் தெறல் நீ; பூவினுள் நாற்றம் நீ;
கல்லினுள் மணியும் நீ; சொல்லினுள் வாய்மை நீ;
அறத்தினுள் அன்பு நீ; மறத்தினுள் மைந்து நீ;
வெஞ்சுடர் ஒளியும் நீ; திங்களும் அணியும் நீ;
அனைத்தும் நீ; அனைத்தின் உட்பொருளும் நீ; பரி 3(63 - 67)

திருமால் முழுமுதற் பொருளாக எண்ணி அவரை வழிபடும் வழக்கம் மிகப் பழங்காலந்தொட்டே இருந்து வந்துள்ளது என்பதனை பாடல்வழி அறிய முடிகிறது.

சங்க இலக்கியங்களில் முருகன்

முதன்முதலில் மனித இனமானது மலை நிலத்தில் வாழ்ந்தது என்றும் அந்நிலத்தின் தலைவன் அல்லது தெய்வம் முருகன் என்றும் சுட்டப்படுகின்றது. சங்கப்பாடல்களில் முருகப் பெருமானின் பிறப்பு முறை, தோற்றப்பொலிவு, பெயரீடுகள், ஊர்திகள், கொடிகள், ஆயுதங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சிவபெருமானுடைய திருமகன் முருகன் என்பதையும் அறிய முடிகிறது.

"மணிமிடற்றண்ணற்கு மதியாரற் பிறந்தோய் நீ" பரி - 5

சேவலங்கொடியோன், சேய், முதிர்கடவுள், நெடுவேள், தெய்வம், முருகு, அணங்கு, கடவுள், மலைவான், விறல்வேள், மலைவறைக் கடவுள், முருகன், சூர்செல்வன், நெடியோன், மால்மருகன் என்று பலப்பெயர்களில் முருகன் குறிப்பிடப்பட்டுள்ளார்.

"சூர்மருங் கறுத்த சுடரிமலை நெடுவேல்
சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து" **குறுந் 1**

தமிழரின் அகவாழ்விலும், புறவாழ்விலும் முருகக் கடவுள் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதனை காணமுடிகிறது.

கொற்றவை

பாலை நிலத்திற்குரிய தெய்வம் கொற்றவை. சிவனின் மனைவியாகவும் குறிஞ்சியில் சில குறிப்புகள் காணப்படுகின்றன. வளமை குறைந்துள்ள இடங்களே பாலை நிலமாகும். வேட்டுவர்கள் பாலை நிலத்திற்கு பூர்வகுடி மக்கள் ஆனாலும் இவர்கள் ஐவகை நிலங்களிலும் பரவி வாழ்ந்துள்ளனர்.

"நெற்றி விழியா நிறைத்திலகம் இட்டாளே
கொற்றவைகோலங் கொண்டோர் பெண்" **பரி 11**

கொற்றவை வீரத்திற்கு அடையாளமாக குறிப்பிடப்படுகிறாள் என்பதையும் அறிய முடிகிறது.

இந்திரன்

இந்திரன் பற்றிய குறிப்புகள் சங்கப்பாடல்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன. மருத நிலத் தெய்வமாகவும், அசுரரை அழித்து அமரரை காத்தார் என்றும் அவர் கொண்டுள்ள வில்லானது பல வண்ணமானது, அவை வானத்து தோன்றும் என்றும், ஐராவதம் என்ற யானையினை வாகனமாக கொண்டவர் என்ற குறிப்புகள் மூலம் அறிய முடிகிறது.

"மூவா மருந்தின் முன்னர்த் தோன்றலின்
தேவர் கோமான் தெய்வக் காவல்" **முல்லைக்கலி - 5**

சங்க இலக்கியங்களில் வருணன்

கடல் சார்ந்த நில மக்களின் தெய்வம் வருணன் எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. வருணனின் வாகனம் முதலை. அலைகடலையே தமது வாழ்க்கை களமாகக் கொண்டிருந்தவர்களுக்கும், கடல்கடந்து வாணிபம் செய்யும் வணிக பெருமக்களுக்கும் வாழ்வளிக்கும் தெய்வமாக வருணன் விளங்கியுள்ளார்.

முடிவுரை

ஒரு நாட்டின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், கலாச்சாரம் போன்றவற்றை அறிந்து கொள்வதற்கு அந்நாட்டில் தோன்றிய இலக்கியங்களே

பெரிதும் கருவியாக அமைகின்றன. தமிழில் தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்களின் வழி அக்கால மக்களின் வீரம், காதல், வாழ்வியல் நெறிமுறைகளை இதுவரை குறிப்பிட்டிருந்தாலும் அவற்றின் நோக்கம் பொதுவாக இறைத்தன்மையை எடுத்துரைப்பதனையும் இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகிறது. சங்ககாலத்தில் சமயம் பொதுநோக்கோடு இருந்ததையன்றி பிரிவினைப் பாகுபாடு இல்லை என்பதனையும் காண முடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. தொல்காப்பியம் பொருளதிகாரம், பேராசிரியர் மு.சண்முகப்பிள்ளை
2. குறுந்தொகை, உ.வே. சாமிநாத ஐயர்
3. கலித்தொகை, புலியூர் கேசிகன்
4. புறநானூறு, புலியூர் கேசிகன்
5. நற்றிணை, புலியூர் கேசிகன்
6. பரிபாடல், புலியூர் கேசிகன்
7. சங்க இலக்கியங்களில் சமய நோக்கு, கு. சுந்தரமூர்த்தி

REFERENCES

1. Tolkappiyam porulatikaram ilampuranar urai
2. Kurunthokai U.Ve.Swa Urai
3. Kalithogai Pulliyur Kesigan Urai
4. Purananooru Pulliyur Kesigan Urai
5. Natrinai Pulliyur Kesigan Urai
6. Paripadal Pulliyur Kesigan Urai
7. Sanga Illakiyangalil Samaya Nokku K. Sundaramoorthi